கைத்தொழில் 1/

ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் தொடர்ச்சியான விரிவாக்கமும், மின்வெட்டு, வழமையான பேணல் போன்ற காரணங்களால் தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டமை காரணமாக சில இறக்குமதிப் பதிலீட்டுக் கைத் தொழில்களின் குறைந்த அளவிலான செயலாற்றம் என்பவை 1981 ஆம் ஆண் டின் கைத்தொழிற்றுறையின் முதன்மையான பண்புகளாக விளங்கின. வெளி நாட்டு முதலீடுகளின் உறுதியான உள்பாய்ச்சல் காரணமாக இயங்கிவந்த ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் வெளிநாட்டுக் கூட்டு முயற்சியாளர்களின் பங்குடன் இணைந்து தொடர்ந்தும் விரிவடைந்தன. மறுபக்கத்தில் தடையற்ற இறக்குமதி களின் போட்டி காரணமாக இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்கள் பலங்குன் றிய செலவு அதிகரித்த கைத்தொழில் நிறுவனங்களை முக்கியமாகச் சிறிய முயற்சி களை மூடவேண்டியிருந்தது. மின்வெட்டுக்கள் கைத்தொழில் வெளியீட்டினைப் பாரதூரமான முறையில் பாதித்தன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தா பனத்தின் எண்ணெய் தூய்மையாக்கல் நிலையம் பேணப்படுவதற்கும், திருத் தப்படுவதற்குமாக மூடப்பட்டமை, மின்வெட்டுடன் இணைந்து வெளியீட்டு வீழ்ச்சியினை அதிகரிக்கச் செய்தது.

1980 ஆம் ஆண்டின் 6 சதவீத அதிகரிப்போடு ஒப்பிடுகையில் 1981 ஆம் ஆண் டில் மொத்த கைத்தொழில் உற்பத்தி, உண்மை நியதிகளில் 2 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டின் பொருளாதார சீர்திருத்தங்களின் பின்னர் கைத்தொழில் வளர்ச்சியில் இதுவே ஆகக் குறைந்த வீதமாகும். இந்த குறைந்த வீத வளர்ச்சிக்கு பெருமளவுக்கு 1981 ஆம் ஆண்டு பெப்புருவரியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் தூய் மையாக்கல் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டமையால் பெற்றோலிய இரசாயன கைத்தொழில் வெளியீட்டில் 5 சத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. இது ஓரளவுக் குத் தற்காலிக தன்மையினதாகவே கருதப்படல் வேண்டும். மின்வெட்டு காரணமாக அரசதுறைக் கூட்டுத்தாபனங்களின் தொழிற்சாலைகள் தற்காலிக மாக மூடப்பட்டமையால் முழுமையான உற்பத்தி மேலும் பாதிக்கப்பட்டது. எனினும், புடவை, ஆடைகள், தோல், தாள் உற்பத்திகள், சீமெந்து கைத் தொழில்களில் அதிகரித்த உற்பத்தி பதிவு செய்யப்பட்டது.

---

1/ கடந்த காலங்களைப் போன்று கைத்தொழிற் துறையின் செயற்பாட்டுத் தரவுகள் அரசதுறையி லிருந்த சிறிய, நடுத்தர, பெரியதுமான தெரிந்த தயாரிப்புக் கைத்தொழில்கட்கு மத்திய வங்கியால் அனுப்பி வைக்கப்பட்ட கேள்விக் கொத்துக்களின் கூற்றுக்களின் அறிக்கையின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. எனினும், இது தேசிய கணக்குகளில் தயாரிப்புத் தொழி லாகக் கணிக்கப்பட்ட பெருந்தோட்டப் பிரிவின் ஏற்றுமதி, செயற்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கவில்லை. பொதுவாகப் பதில்கள் மூன்றிலொரு பங்கினரிடமிருந்து கிடைத்தன. இவைகள் பெரிதும் பெருங் கைத்தொழில்களை உள்ளடக்கியிருந்தன. தரவுகள் கிடைக்காத பகுதிகளில் அரச முகவர் நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் கிடைத்த, தரவுகளி னடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட பதிவு செய்யப்படாத சிறு அளவிலான கைத்தொழில் நிறுவனங்களின்* அளவைகளின்படி, 1976 ஆம் ஆண்டில் இயங்கி வந்த குறிப்பிடத்தக்க அளவிலான முயற்சிகள், திறமையின்மை காரணமாக ஏற்பட்ட அதிகரித்த செலவினங்களினால் உருவாக்கப்பட்ட சந்தைப்படுத்தும் பிரச்சினைகளின் பயனாக 1981 ஆம் ஆண்டில் செயற்பாடற்றிருந்தன. இவை இவ்வாறாக இறக்குமதி செய்யப்பட்ட பதிலீட்டுப் பொருட்களின் போட்டியினை எதிர்கொள்ள முடியாது இருந்தன. இவற்றால் தொழிற்படு மூலதனத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமை, சிக்கல்களை மேலும் அதிகரிக்கச் செய்தது. பெருமளவில் பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள், கைத்தறித்துணிவகைகள், கரும்புச் சீனிக் கருப்பட்டி, சவர்க்காரம், தாள் உற்பத்தி, உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள், மட்பாண்டத்தொழில், பிரம்பு உற்பத்திகள்என்பவையாகும். 1981 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து உயர்ந்த அளவிலான வெளியீட்டைப் பதிவு செய்த கைத்தொழில்கள், அரிசி குற்றுதல், இரும்புத்தொழில், பாரவண்டி உடற்கோப்பு அமைத்தல், செங்கல் சுடுதல் என்பவையாகும். கடந்த ஆண்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டவாறு, சிறு உற்பத்தியாளர்களின் பிரச்சனைகளையும், இந்த முயற்சிகளிலிருந்து உள்நாட்டு மூலப் பொருட்களைப் பாவிப்பதன் மூலமும் தொழில் வாய்ப்புக்களை ஆக்குவதன் மூலமும் ஏற்படும் நன்மைகளையும் கணிக்குமிடத்து தற்போதைய வரி அமைப்பு முறையை மீள ஆராய்ந்து இக்கைத்தொழில்கட்கு ஆரம்ப நிலையில் ஓரளவு வரிப்பாதுகாப்பு அளிப்பதை கருத்திற் கொள்ளுவதன் அவசியத்தை விளக்குகின்றது. எப்படியிருப்பினும் எந்தக் கைத்தொழில் முயற்சியினதும் தொடர்ச்சி பொருளாதார ரீதியில் இருக்க வேண்டுமேயன்றி நலனளித்தலடிப்படையில் இருத்தல் கூடாது.

ஆய்வுக்குரிய ஆண்டுகாலப் பகுதியில் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவித்தலளிப்பதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் மீள நிதியிடல் வசதியில் நிதி நெருக்கடியிலிருந்து மீழுவதற்காக அரச கூட்டுத்தாபனங்களை சேர்த்துக்கொண்டமை இந்நடவடிக்கைகளில் ஒன்றாகும். 1981 ஆம் ஆண்டில் முதலாவது சிறிய, நடுத்தர அளவு கைத்தொழிற் திட்ட (சி. ந. கை.) கடன் முழுமையாகப் பாவிக்கப்பட்ட பின்னர், தேசிய அபிவிருத்தி வங்கி இரண்டாவது கடனான ஐ. அ. டொலர் 300 இலட்சம் கொண்ட தொகையை எதிர்வரும் ஆண்டுகளில் சிறிய நடுத்தர அளவிலான கைத்தொழில்கட்கு நிதியீட்டுவதற்காக பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிடமிருந்து ஒழுங்கு செய்தது. 1981, நவெம்பர் நடுப்பகுதியில் இருந்து கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் அவசியமான மூலப் பொருட்கள், பொறிகள் மீதான இறக்குமதித் தீர்வைகள் 12½ சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டது. இறக்குமதிகள் மீது இறக்குமதித் தீர்வையை விட மொத்த விற்பனை வரி ஒன்றினை விதிப்பதன் மூலமும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கு மீளளிப்பு வழங்குவதன் மூலமும் கைத்தொழிலாளர்கட்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டது. இலங்கையில் பொருட்கள் அல்லது பண்டங்களின் உற்பத்தியில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பாவிக்கப்பட்டவிடத்து, உற்பத்தியாளரால் அந்தப் பொருட்கள்மீது செலுத்தப்பட்ட மொத்த விற்பனைவரி, அவர் செலுத்தும் மொத்த விற்பனை வரியிலிருந்து கழிக்கப்படக்கூடியதாக இருந்தது. இதேபோல உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு

---

* இவை பெயரளவில் ஒழுங்கற்ற தன்மையினதாகவும், சிறுதொழிற்கூடங்களை உள்ளடக்கிய பதிவு செய்யப்படாத கைத்தொழில் அமைப்புக்கள், குடிசைக் கைப்பணிப் பொருட்கள என்பனவாகும் காணப்பட்டன.

பொருள் இன்னுமொரு பொருளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் போது அதன்மீது செலுத்தப்பட்ட மொத்தவிற்பனை வரியும் அதன் இறுதி உற்பத்தியாளரால் செலுத்தவேண்டிய மொத்த விற்பனை வரியிலிருந்து கழிக்கப்படக்கூடியதாக இருந்தது. இந்நடவடிக்கைகள் ஓரளவுக்கு உள்நாட்டு உற்பத்திச் செலவினையும் விலையையும் குறைக்க உதவும் எனவும் அதனால் அவற்றின் போட்டித்தன்மை உறுதிப்படும் எனவும் கருதப்பட்டது.

செறிவு தொடர்பாக பெற்றோலிய இரசாயன உற்பத்திகளின் வெளியீடு மொத்த கைத்தொழில் உற்பத்தியின் அரைப்பங்கு அளவிற்கு வகை கூறியவிடத்து, ஆடைகளின் பங்கு ஏறக்குறைய 10 சதவீதமளவிற்கு காணப்பட்டதுடன் கைத்தொழில் செறிவில் ஓர் அதிகரித்த வீதத்தை எடுத்துக்காட்டியது. மசகெண்ணெயின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புபெருமளவுக்கு இந்நிலைக்குக்காரணமாக அமைந்தது. இதன் காரணமாக மொத்த கைத்தொழில் உற்பத்தியின் வேகம், இந்த இரண்டு கைத்தொழில்களின் பொருளாதார வளங்களுக்கு மிக நெருக்கமாக இணைந்து காணப்படுகின்றது. இந்நிலை மேலும், பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தியடைந்த கைத்தொழில் அமைப்பு உருவாகும்வரை தொடர்ந்தும் நீடித்திருக்கும். எப்படியிருப்பினும் மொத்த வெளியீட்டுப் பெறுமதிக்கு பெற்றோலிய உற்பத்தி முதன்மையான பங்கை வழங்கியிருந்தாலும், உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமதியின் பங்கில் இவ்வுற்பத்திகள் மிகவும் பின்னடைந்து காணப்பட்டன. ஆடை உற்பத்திகள் 10 சதவீத பங்கினை மட்டுமே கொண்டிருந்தபொழுதும் தொழில் வாய்ப்பு நியதியில் மிகவும் முக்கிய இடத்தை வகித்தன.

1981 ஆம் ஆண்டின் கைத்தொழில் பிரிவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள், பலவற்றில் இலங்கை தோல்உற்பத்திக் கூட்டுத்தாபனம் கொரிய குடியரசின் டூசான் கைத்தொழில் கூட்டு நிலையம், டொங்யாங் இறப்பர் முயற்சிகள் கூட்டுநிலையம் என்பன இணைந்து அமைத்த வரையறுக்கப்பட்ட கொரிய இலங்கை காலணி உற்பத்திக்கூட்டு நிலையமும் ஒன்றாகும். இதுவே கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் ஒரு அரச கூட்டுத்தாபனம் பங்குபற்றிய முதலாவது கூட்டு முயற்சியாகும். இன்னுமொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாதெனில் இலங்கை சீமெந்துக்கூட்டுத்தாபனத்தின் மூன்றாவது கட்ட விரிவாக்கச் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவும் நடாத்தவும் வரையறுக்கப்பட்ட இலங்கைசீமெந்து எனப்படும் வரையறுக்கப்பட்ட பொது கூட்டு நிலையத்தை ஆரம்பித்தமையாகும். இக்கூட்டு நிலையத்தின் மொத்த பங்குகளில் 60 சதவீதத்தை இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனமே ஏற்றுக்கொண்டதுடன் மிகுதியை பொது மக்களுக்கு வழங்கியது. மூன்றாம் கட்டமாக இத்தொழிற்சாலை 1982 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆண்டொன்றிற்கு 528,000 தொன் சீமெந்தை உற்பத்தியாக்கும் ஆற்றல் உடையதாக வர்த்தக உற்பத்தியில் ஈடுபடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நைலோன் 6 செயற்றிட்டம் எனப்படும் ஒரு முக்கிய அரச கைத்தொழிற் பிரிவு 1981 ஆம் ஆண்டில் செயற்படத்தொடங்கியது. ரூ. 7,500 இலட்சம் மூலதனச் செலவினத்தைக் கொண்ட இச்செயற்றிட்டம், புடவை, டயர், மீன்பிடிக் கைத்தொழில் என்பவற்றுக்கான மூலப் பொருட்தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கே உருவாக்கப்பட்டது. அரச பிரிவில் ஆகக்கூடிய மூலதனச்செறிவுடைய செயற்றிட்டங்களில் ஒன்றான (ரூ. 28,190 இலட்ச மூலதனச் செலவினத்தைக்கொண்ட) யூறியா வளமாக்கி, செயற்றிட்டம் 1980 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் செயற்படத் தொடங்கி ஆய்வுக்குரிய ஆண்டில் அடிக்கடி மூடப்பட்டது. இச்செயற்றிட்டங்கள்

இரண்டும் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, மாற்றமடைந்துள்ள சூழ்நிலையின் அடிப்படையில் பார்க்குமிடத்து, இவை வர்த்தகரீதியாக இயங்கும் தன்மை தீர்க்கப்பட வேண்டிய ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்தது.

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு 1981 இல் ரூ. 11,610 இலட்சம் முதலீட்டு ஆற்றலைக்கொண்டதும் 5,849 மதிப்பிடப்பட்ட தொழில் வாய்ப்புக்களையும் கொண்ட 63 கைத்தொழில் திட்டங்களை அங்கீகரித்தது.

இவ்வருட காலத்தில் கைத்தொழில் அறிவியல் அமைச்சு, புடவைக் கைத்தொழில், கடற்றொழில்அமைச்சு என்பவைகளின் கீழான உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு 458 கைத்தொழிற் செயற்றிட்டங்களை அங்கீகரித்தன. இத்திட்டங்களின் மூலதன ஆற்றல் ரூ. 2,540 இலட்சத்தைக் கொண்டு ஏறத்தாழ 10,641 பேரிற்கு வேலை வாய்ப்புக்களை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் 1981 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 18 செயற்றிட்டங்களை அங்கீகரித்தது. இதன்படி ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 155இற்கு அதிகரித்தது. இவற்றுள் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் 68 நிறுவனங்கள் பல்வேறு கைத்தொழில்களை நிறுவுவதற்கு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டன. இவற்றுள், 41 செயற்றிட்டங்கள் வர்த்தகஉற்பத்தியில் ஈடுபட்டு 19,921 பேரிற்கு வேலை வாய்ப்பையும் வழங்கியன.

1981ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதியின் மீதான வருவாய்கள் 1980 இல் ரூ. 56,190 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 2,610 இலட்சம்) 1981 இல் ரூ. 71,930 இலட்சமாக (சி. எ. உ. 3,17,0 இலட்சம்) 28 சதவீதத்தால் (சி. எ. உ. 21%) அதிகரித்தது. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் புடவைகள், ஆடைகள் ஏற்றுமதி 65 சதவீதத்தால் அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்டதாகும்.

உற்பத்தி

உண்மை நியதியில் கைத்தொழில் தயாரிப்புகளின் மொத்த வெளியீடு 1980 ஆம் ஆண்டின் குறிப்பிடத்தக்க 6 சதவீத வளர்ச்சி விகிதத்துடன் ஒப்பிடுமிடத்து 1981 இல் 2 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. இதுவே, 1977 இலிருந்தான மிகக்குறைந்த அளவான வளர்ச்சி விகிதமாகும். 1981 இன் மொத்த கைத்தொழில் வெளியீட்டின் குறைந்த வளர்ச்சி வீதமானது பெரும்பாலும் மொத்த கைத்தொழில் உற்பத்தியில் ஏறக்குறைய அரைப்பங்காகக் கணிக்கப்பட்ட பெற்றோலிய இரசாயன கைத்தொழில் வெளியீட்டிலேற்பட்ட 5 சதவீத வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும். 1980 இல் இவ்வகைக் கைத்தொழில்களின் வளர்ச்சிவிகிதம் 22 சதவீதமாக இருந்ததுடன் அவை அந்த ஆண்டின் உயர்ந்த வளர்ச்சி வீதத்திற்கு பெரும்பொறுப்பு வகித்ததென்பதனையும் கருத்திற்கொள்ளுதல் ஏற்புடைத்தாகும். அரசதுறை கூட்டுத்தாபனங்களின் மொத்த வெளியீடு 1 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. மறுபுறம், மின்வெட்டு இருந்தபோதும், தனியார்துறைக் கைத்தொழில்கள், முந்திய ஆண்டின் 6 சதவீத வளர்ச்சி விகிதத்துடன் ஒப்பிடுமிடத்து 1981 இல் 13 சதவீத வளர்ச்சி விகிதத்தைப்பதிவு செய்தது.

இத்துறைகளில் உண்மையான நியதியில் அதிகரித்து உற்பத்தியைப் பதிவு செய்தவை புடவைகளும், ஆடைகளும் தோல் உற்பத்திகளும்(43 சதவீதத்தால்) தாள், உற்பத்திகள்(23 சதவீதத்தால்) உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள்

(9 சதவீதத்தால்) வேறு ஓரிடத்திலும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் (4 சதவீதத்தால்) தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் வெளியீடு (6 சதவீதத்தால்) என்பன வாகும். ஏனைய கைத்தொழில் துறைகளின் உற்பத்திகள் வீழ்ச்சியைக் காட்டின. அடிப்படை உலோக உற்பத்திகளின் உற்பத்தி 15 சதவீதத்தாலும், மர மரஉற்பத்திகள் 13 சதவீதத்தாலும், இரசாயன பெற்ரோலியப் பொருட்கள் 5 சதவீதத்தாலும் உணவு குடிவகைகள் புகையிலை உற்பத்திகள் 4 சத வீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

தற்போதைய நியதிகளின்படி 1981 இல் கைத்தொழில் உற்பத்தியின் மொத்த பெறுமதி 23 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டது. 1980 இலும் பார்க்க 1981 இல் புடவைகள், ஆடைகள் என்பனவற்றின் பெறுமதி 58 சதவீதமாக பெருமளவிலான அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக வெளிநாட்டு முகாமைப்படுத்தப்பட்ட புடவைக் கூட்டுத்தாபனங்களினது புடவை ஆலைகளின் உயர்ந்த வெளியீட்டின் காரணமாகவும் பங்காளரால் குறிப்பாக முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் ஆடைக்கைத்தொழிலின் அதிகரித்த வெளியீட்டின் காரணமாகவும் ஏற்பட்டதாகும். பெற்ரோலிய இரசாயன உற்பத்தியின் பெறுமதி 28 சதவீதத்தினலும் உணவு குடிவகைகளின் பெறுமதி 15 சதவீதத்தினலும் தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 26 சதவீதத்தினலும் தாள், தாள் உற்பத்திகள் 32 சதவீதத்தினலும், உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் 5 சத விதத்தினலும் அதிகரித்தன.

அட்டவணை 1.15

**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1977 - 1981**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பிரிவு | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை ... | 2,295 | 2,609 | 2,856 | 3,899 | 4,496 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 698 | 1,008 | 1,128 | 1,923 | 3,040 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | 127 | 124 | 166 | 289 | 315 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் .. | 270 | 376 | 445 | 476 | 626 |
| 5. இரசாயனம், பெற்ரோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் .. | 2,469 | 3,279 | 4,508 | 9,416 | 12,015 |
| 6. பெற்ரோலியமும் நிலக்கரியும் தவிர்த்து உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் .. | 411 | 592 | 710 | 1,006 | 1,060 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 132 | 219 | 349 | 478 | 428 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 571 | 590 | 569 | 620 | 782 |
| 9. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 34 | 55 | 50 | 54 | 58 |
| மொத்தம் | 7,007 | 8,852 | 10,781 | 18,161 | 22,820 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகம்

**வலுவும் எரிபொருளும்**

1981 இல் கைத்தொழில் வெளியீட்டின் மீதமான வளர்ச்சி வீதத்திற்கெதிராக கைத்தொழிலில் மின்வலுப்பயன்பாடும் கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் (ஏற்றுமதி செய்முறைக் கைத்தொழில் உள்ளாக) என்பனவற்றின் மீதான மின்வலுப் பாவனை முறையே 6 சதவீதத்தினாலும் 18 சதவீதத்தினாலும் அதிகரித்தன. கைத்தொழில் எரிபொருள் விற்பனையின் இந்த அதிகரிப்பு, ஒரு பகுதி இலங்கை மின்சபையினால் மின் உருவாக்கத்திற்கு, அதிகரித்த எரிபொருள் பயன்படுத்தப்பட்டமையின் காரணமாகவும் கைத்தொழில் பாவனையாளர்கள் மின்துண்டிப்பு காலத்தில் மின்வலு பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக துணைநில் மின்உருவாக்கிகளை பயன்படுத்தியமையின் காரணமாகவும்ஓரளவுக்கு ஏற்பட்டதாக கருதப்படுகின்றது. கைதொழிலாளரினால் தாமாகவே உருவாக்கிய மின்வலுவை கணக்கிலெடுக்குமிடத்து கைத்தொழிலில் மின்வலுவின் பயன்பாடு முந்திய ஆண்டை விட உயர்ந்த அதிகரிப்பை பதிவு செய்திருக்கும்.

தேசிய மின் அமைப்பினால் வழங்கப்பட்ட மின்வலு முக்கிய நீர்தேக்கங்களின் நீர்மட்டங்கள் வீழ்ச்சியடைந்தன் காரணமாக 1981 பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்து யூன் நடுப்பகுதிவரை கட்டுப்படுத்தப்பட்டு இவ்வழங்கல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், மாவரைத்தல் கூட்டுத்தானம், வரையறுக்கப்பட்ட கொழும்பு வளி, நீர் கூட்டுநிலையம், வரையறுக்கப்பட்ட இலங்கை உயிர்வாயு கூட்டு நிலையம் என்பன தவிர்ந்த ஏனைய எல்லா கைத்தொழில் நிறுவனங்களிற்கும் நீடிக்கப்பட்டது. இந்நிலைமையை எதிர் நோக்கியதால் சில அரசதுறை கூட்டுத்தாபனங்கள் துணைநில் மின் உருவாக்கிகளைப் பாவித்தவேளையில், வேறு சில கூட்டுத்தாபனங்கள் தற்காலிகமாக தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாகின.

அட்டவணை 1.16

**கைத்தொழில் வலு, எரிபொருள் என்பவற்றின் பயன்பாடு 1979 - 1981**

| விடயம் | 1979 | 1980 | 1981 (அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (ஆ) (கிலோவாட் மணித்தியாலங்கள்) ... | 633.4 | 625.6 | 664.8 |
| 1.1 சிறு கைத்தொழில் .. | 16.7 | 20.0 | 21.5 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... | 287.3 | 285.7 | 303.9 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... | 329.4 | 319.9 | 339.4 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ('000 மெற்றிக் தொன்கள்) .. | 226.1 | 295.4 | 349.2 |
| 2.1 பார எண்ணெய் ... | 64.0 | 60.8 | 106.4 |
| 2.2 உலை எண்ணெய் ... | 162.1 | 234.6 | 242.8 |

மூலங்கள்: இலங்கை மின் சபை,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகம்

(ஆ) தயாரிப்பு ஏற்றுமதி செய்முறை கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது 50 கி. வா. ம. க்குக் குறைந்த இயலளவினைக் கொண்டவை நடுத்தரக் கைத்தொழில் 50-500 கி. வா. ம கொண்டவையும், பெரும் கைத்தொழில் 500 கி. வா. ம க்கு மேற்பட்டவையுமெனவரையறைசெய்யப்பட்டது

இருந்த போதும் மின்வலு வழங்கல் மீளளிக்கப்பட்டதும் மின்வெட்டினல் பாதிக்கப்பட்ட அநேகமான கூட்டுத்தாபனங்கள் ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் உற்பத்தி இழப்புகளை ஈடுசெய்து சமாளிக்க முடியாது. தனியார்துறையிலும் நிறுவனங்கள் துணை நில் மின் உருவாக்கிகள் பாவனைக்கு மாறுவதன்மூலம் மின்வெட்டு இல்லாத நேரங்களில் வேலை நேரங்களை மாற்றுவதன்மூலமும் நிலைமைக்கேற்றவாறு தம்மை சீர்படுத்திக்கொண்டன. முயற்சிகளின் அளவின் அடிப்படையில் நடுத்தர, பெரிய கைத்தொழில்களால் பாவிக்கப்பட்ட மின்வலு முறையே 6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தவிடத்து சிறு கைத்தொழில்களினுல் பாவிக்கப்பட்ட மின்வலு 7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

அரசதுறைக் கைத்தொழில்


1980 ஆம் ஆண்டின் 8 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக உண்மை நியதியில் அரசதுறை முயற்சிகளின் முழுமையான கைத்தொழில் உற்பத்தி 1981 இல் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முழுமையான இவ்வீழ்ச்சி, பெரும்பாலும் 1981 பெப்புருவரியில் பழுதுபார்ப்பதற்காகமூடப்பட்டபெற்ருேலிய தூய்மையாக்கல் நிலையத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் (7 சதவீதம்) காரணமாக ஏற்பட்டதாகும். 1981 இல் உண்மை நியதியில் பெற்ருேலியக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த ஏனைய அரசதுறை கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் மொத்த வெளியீடு 5 சதவீதத்தால் அதிகரித்தது.

எட்டு கைத்தொழில்வகைகளில், புடவை, ஆடைகள், தோல் பொருட்களின் வெளியீடு 35 சதவீதத்தாலும், தாள், தாள் உற்பத்திகள் 8 சதவீதத்தாலும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் 8 சதவீதத்தாலும் அதிகரித்த வேளையில் தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (30 சதவீதத்தாலும்) அடிப்படை உலோக உற்பத்திகள் (15 சதவீதத்தாலும்) மர, மர உற்பத்திகள் (14 சதவீதத்தாலும்) உணவு, குடிவகை, புகையிலை உற்பத்திகள் (8 சதவீதத்தாலும்) இரசாயன பெற்ருேலிய உற்பத்திகள் (5 சதவீதத்தாலும்) வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

1981 இல் குறைந்த வெளியீட்டு மட்டத்தை அடைந்த கூட்டுத்தாபனங்கள் உருக்கு, எண்ணெய் கொழுப்பு, மட்பாண்ட, வன்கல, டயர், தோல் கூட்டுத்தாபனங்களும் அரசாங்கத்தால் உடைமையாக்கப்பட்ட பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை மேற்கொள்ளல்களுமாகும். 1980 இல் தமது உற்பத்தி மட்டத்தை அதிகரித்த கூட்டுத்தாபனங்களில், புடவைக் கூட்டுத்தாபனம் தமது நிருவாகத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு சாதகமாக செயற்பட்டது. உண்மை நியதியில் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினதும் தேசிய பால் சபையினதும் வெளியீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தன.

## அரசதுறையின் * கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

*1977 = 100*




இலங்கை மத்திய வங்கி.

* 26 பெரும் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீட்டைப் பிரதிபலிக்கிறது.

விற்பனைகளைப் பொறுத்தவரையில்அரசுதுறை கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் செயலாற்றம் 1981இல் ஒரு மிதமான போக்கை காட்டியது. தமது தனியுரிமையை விட்டுக்கொடுக்காது இன்னும் குறிப்பிடத்தக்கனவிற்காயினும் ஓரளவிற்காயினும் அவ்வுரிமைகளைக்கொண்டிருக்கும் பெற்றோலியம், சீமெந்து, கனிப்பொருள், மணல், அரசஅகழ்வு கனிப்பொருள், அபிவிருத்தி போன்ற கூட்டுத்தாபனங்களும்இலங்கை உயிர்வாயு நிறுவனத்தின் அரச உடமையாக்கப்பட்ட வியாபாரங்களும், 1981இல் குறிப்பிடத்தக்க அளவில் விற்பனையை அதிகரித்தன. மறுபுறம், இறக்குமதிப் பொருட்களினூலான போட்டி காரணமாக கூட்டுத்தாபனங்களின் விற்பனை சிறப் பாக அமையவில்லை. குறிப்பாக, தாள், உருக்கு, வன்கல, கூட்டுத்தாபனங் கள் வெளிநாட்டு போட்டியாளரின் விலைத்தந்திரங்களினூல் தம்நிலை இழந்த துடன் இதன்விளைவாக கடுமையான சந்தைப்படுத்தும் பிரச்சினையையும் ஒன்று திரண்ட இருப்புக்கள் பிரச்சனையையும் எதிர்நோக்கநேரிட்டது.

அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் மொத்த ஏற்றுமதி வருவாய் 1980 இன் ரூ. 33,400 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 1,550 இலட்சம்) 1981 இல் ரூ. 35,990 இலட்சத்திற்கு (சி. எ. உ. 1,590 இலட்சம்) அதிகரித்து 8 சதவீத உயர்வைப்பிரதிபலிக்கின்றது. ரூ. 33,750 இலட்சமாக இருந்த பெற்றோலிய ஏற்றுமதி வருவாய்கள் மீண்டும் பெருந்தொகையான கைத்தொழில் ஏற்றுமதி களுக்கு வகை கூறியது. இருந்தபோதும், பெற்றோலிய ஏற்றுமதிகளின் உயர்ந்த இறக்குமதி உள்ளடக்கத்தினூல் தேறிய வருவாய் மிகவும் குறைவாகவே இருக் கும்.

அரசதுறையில் அதிகரித்த இயலும் திறமையை உருவாக்கும் அரசாங்க கொள்கையுடன் ஒத்துப்போகும்வகையில், அரசதுறையால் உடமைப்படுத்தப் பட்ட பெரிய உற்பத்திக்கைத்தொழில்கள், வர்த்தக ரீதியில் இயங்கும்படி கேட் கப்பட்டதுடன், அரச வன்கல, தாள் கூட்டுத்தாபனங்கள் தவிர்ந்த ஏனைய அரச துறை கைத்தொழில் செயற்றிட்டங்கள் இது சம்பந்தப்பட்ட வரையில் குறிப் பிடத்தக்க அளவில் செயலாற்றியதாகத் தெரிகின்றது. 1981 இன் கனிப்பொருள் மணல், கனிப்பொருள் அகழ்வு அபிவிருத்தி, மட்பாண்ட, சீமெந்து கூட்டுத்தா பனங்கள் இத்துறையில் முன்னணியில் நின்றன.

1981 இல் அரச துறை கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களிற்கான மொத்த அரச மாற்று கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி கருத்திலெடுக்கப்பட வேண்டிய தொரு பெரிய அபிவிருத்தியாகும். 1979 இல் ரூ. 2,480இலட்சத்திலிருந்து 1980 இல் ரூ. 7,270 இலட்சத்திற்கு உயர்ந்த மொத்த மாற்றல்கள் 1981 இல் ரூ.2,500 இலட்ச த்திற்கு வீழ்ச்சியடைந்தது. நடைமுறை மாற்றல்களிலேற்பட்ட கருத்திற் கொள்ளத்தக்க வீழ்ச்சி நிதி ஒழுங்கிலும் பல அரசதுறை கைத்தொழில் முயற்சி களின் செயலாற்றத்திலும் ஒரு முன்னேற்றத்தைப் பிரதிபலித்தது. நடைமுறை

மாற்றல் கொடுப்பனவுகள் 1980 இல் ரூ. 1,820 இலட்சத்திலிருந்து 1981 இல் ரூ. 720 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது அரசதுறை முயற்சிகள் புதிய செயற்றிட்டங்களிற்கு தாமாகவே மூலவளங்களில் பெரும் பகுதியைத் திரட்டவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில் உற்பத்திக் கூட்டுத்தாபனங்களிற்கான மூலதன மாற்றல்களும் 1980 இன் ரூ. 5,450 இலட்சத்திலிருந்து 1981 இல் ரூ. 1,780 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உருக்கு, (நிலை i i i) சீனி (செவனகல திட்டம்) வளமாக்கித் தயாரிப்பு (யூறிய திட்டம்) எண்ணெய் (கொழுப்பு (கரையலை பிரித்தெடுத்தல் ஏனைய செயற்திட்டம்) கூட்டுத்தாபனங்களுக்கும், தேசிய பாற்சபை பொலிதீன் அடைத்தற் செயற்றிட்டம் என்பனவற்றிற்கு பல ஆண்டுகளிற்கு முன் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்களிற்கு எதிராக ஒன்று திரட்டப்பட்ட நிதியிலிருந்து கணிசமான நிதிகள் வழங்கப்பட்டன. கூடிய மூலதன முதலீடுகளைக்கொண்ட தொடர்ச்சியான அபிவிருத்தி திட்டங்களிற்கெதிராக உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நிதிகளின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டமையின் காரணமாக கூட்டுத்தாபனங்கள் வர்த்தக வங்கிகளிடமிருந்து நடைமுறையில் உள்ள வட்டி வீதங்களில் கடன்பெற நிர்ப்பந்தப் படுத்தப்பட்டன. அநேக கூட்டுத்தாபனங்கள் மூலதன முதலீடுகளின் அதிகரித்த தாக்கம் காரணமாக நிதி நெருக்கடியை அநுபவித்ததுடன், தமது மூலதனத் திட்டங்களைக் கட்டுப்படுத்தவோ பின் போடவோ நேரிட்டது. இவ்வாறாகத் தற்காலிக எண் தொகைகளின்படி கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் மொத்த மூலதனச்செலவு வரவு செலவுத்திட்ட எண் தொகையாகிய ரூ. 19,250 இலட்சத்திற்கெதிராக ரூ. 5,450 இலட்சமாகக்காணப்பட்டது.

அட்டவணை 1.17

முதன்மை அரசதுறை கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்(அ)

( 1977 = 100 )

| பிரிவு | 1979 | 1980 | 1981(ஆ) |
|---|---|---|---|
| 1. உணவு குடிவகை புகையிலை ... | 123.5 | 88.7 | 82.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் .. | 110.9 | 83.8 | 113.4 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | 96.0 | 158.1 | 136.4 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 130.3 | 130.4 | 141.1 |
| 5. இரசாயனம், பெற்ரோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள், ... | 97.3 | 125.0 | 118.8 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ... | 156.9 | 149.8 | 161.8 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 175.9 | 197.7 | 169.0 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ... | 109.0 | 115.4 | 81.4 |
| எல்லா வகைகளும் | 111.1 | 119.7 | 118.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) பெருந்தொகையான அரசதுறை கைத்தொழில்களை கருத்தில் எடுப்பதற்காக இச்சுட்டெண் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது

(ஆ) தற்காலிகம்.

அட்டவணை 1.18

## கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1979—1981

ரூபா பத்து இலட்சம்.

| கூட்டுத்தாபனங்கள் / முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1981 (அ) | 1979 | 1980 | 1981 (அ) | 1979 | 1980 | 1981 (அ) |
| தேசிய பாற்சபை ... | 12.8 | 15.5 | 50.4 | 54.0 | 53.0 | 44.4 | 66.8 | 68 5 | 94.8 |
| இலங்கை எண்ணெய் கொழுப்பு ... | — | 25.1 | 34.7 | 27.0 | 41.9 | — | 27.0 | 67.0 | 34.7 |
| இலங்கைச் சீனி ... | 4.5 | 8.0 | 46.8 | — | — | — | 4.5 | 8.0 | 46.8 |
| அரச மாவரைத்தல் ... | — | — | — | — | 21.5 | — | — | 21.5 | — |
| தேசிய புடவை ... | 10.3 | — | — | 13.4 | 26.6 | — | 23.7 | 26.6 | — |
| அரச மரம் ... | — | 0.1 | — | — | — | — | — | 0.1 | — |
| தேசிய தாள் | — | 40.4 | — | — | 28.7 | 21.2 | — | 69.1 | 21.2 |
| அரச இறப்பர் தயாரிப்பு ... | — | — | — | 0.2 | — | — | 0.2 | — | — |
| பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் ... | — | 10.5 | — | — | 8.2 | — | — | 18.7 | — |
| இலங்கை ஆயுள்வேத மருந்துகள் ... | 10.6 | — | 0.3 | — | — | — | 10.6 | — | 0.3 |
| இலங்கைப் பெற்றோலியம் ... | — | 10.7 | — | 87.0 | — | — | 87.0 | 10.7 | — |
| அரச வளமாக்கி தயாரிப்பு ... | — | 397.5 | 28.3 | — | — | — | — | 397.5 | 28.3 |
| தேசிய சுரங்கமறுத்தலும் கனிப்பொருள் அபிவிருத்தியும் ... | — | — | — | — | 1.9 | — | — | 1.9 | — |
| இலங்கை உருக்கு ... | — | 10.7 | 7.9 | — | — | — | — | 10.7 | 7.9 |
| அரச வன்கலம் .. | — | 2.0 | — | 28.6 | — | — | 28.6 | 2.0 | — |
| தேசிய பொருட்கள் பொதியிடல் .. | — | 0.3 | — | — | — | 6.0 | — | 0.3 | 6.0 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை ஓட்சிசன் .. | 24.0 | 10.0 | 10.0 | — | — | — | — | 24.0 | 10.0 |
| மொத்தம் | 38.2 | 544.8 | 178.4 | 210.2 | 181.8 | 71.6 | 248.4 | 726.6 | 250.0 |

(அ) தற்காலிகம்

மூலம்: பொதுத் திறைசேரி

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்

அரசின் முன்னணிச் செயற்றிட்டங்களில் ஒன்றாகிய கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொ. பெ. பொ. ஆ.) 1981 இல் 18 செயற்றிட்டங்களிற்கு அங்கீகாரமளித்து 1981 இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கையை 155 ஆக்கியது. இவற்றில் 68 நிறுவனங்கள் கைத்தொழில்களை நிறுவுவதற்கு கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டன. மொத்தமாக 41 நிறுவனங்கள் (இவற்றில் 37 கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில்) வர்த்தக உற்பத்திகளில் ஈடுபட்டிருந்தன. உற்பத்தியிலீடுபட்டிருக்கும் முயற்சிகளின் மூலதன முதலீடு ரூ. 7,610 இலட்சமாகும். வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் செயற்திட்டங்களில் 24 ஆடைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. 1981 திசெம்பரில் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் செயற்றிட்டங்களில் இருந்த தொழிலாளரின் மொத்த எண்ணிக்கை 19,921 ஐ அடைந்தது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் ஏற்றுமதிகளின் மொத்த வருவாய் 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 8,820 இலட்சமாகவும் (சி எ உ 390 இலட்சம்) இருந்து இவ்வருவாயில் ஆடை ஏற்றுமதிகள் 88 சதவீதமாகக் கணக்கிடப்பட்டது. இக்காலப்பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய பொருட்களாவன டயர்கள், மீன்பிடிச் சாதனங்கள், மெருகூட்டிய இரத்தினக்கற்கள், தேயிலைப்பைகள் ஆபரணங்கள், தலைமயிர் உலர்த்திகள், முந்திரிப்பருப்புகள், மரப் பொம்மைகள், இறப்பர் நூல்கள், பட்டிகள், விரிப்புக்கள் என்பனவாகும்.

இவ்வாண்டு காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள், பி.வி.சி,, கதிரியக்கம் உண்டுபண்ணும் காபன், அலுமினிய அமைப்புகள், கட்டுப்படுத்தல் ஒலி பரப்பு தகடுகள்ஒன்றிணைக்கப்பட்ட மின்வலுநெறிகள், எண்ணெய்ப்பாம் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் புதிய வகையானகைத்தொழில்களை உள்ளடக்கியிருந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்கு முதலீட்டு கருத்தரங்குகள், விளம்பரங்கள், நேர்முகப் விளம்பல்கள் என்பன சர்வதேச ரீதியில் செய்யப்பட்டன. கட்டுநாயக்க வலயத்தின் முழுப்பரப்பளவும் முதலீட்

### அட்டவணை 1.19

### முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் — தொழில்நிலையும் ஏற்றுமதிகளும்

| கைத்தொழில் | 1980 | | 1981 (அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை எண்ணிக்கை (திசெ.இறுதி) | மொத்த வருவாய்கள் ரூ. ப. இ. | தொழில் நிலை எண்ணிக்கை (திசெ.இறுதி) | மொத்த வருவாய்கள் ரூ. ப. இ. |
| 1. ஆடைகள் | 9,147 | 470.1 | 17,386 | 775.2 |
| 2. மீன்பிடி வலைகளும் துணைக்கருவிகளும்... | 245 | 10.6 | 199 | 8.5 |
| 3. இறப்பர் உற்பத்திகள் ... | 82 | 12.1 | 830 | 45.6 |
| 4. இரத்தினக்கல் வெட்டலும் ஆபரணங்களும் | 285 | 3.2 | 140 | 3.1 |
| 5. தேயிலை உறைகளிலடைத்தல் | 12 | 3.8 | 23 | 9.3 |
| 6. மாமுந்திரி உற்பத்திகள் ... | 483 | 4.8 | 265 | 14.8 |
| 7. மின் கருவிகள் ... | — | — | 286 | 20.2 |
| 8. ஏனையவை ... | 327 | 0.7 | 792 | 5.0 |
| மொத்தம் | 10,581 | 505.3 | 19,921 | 881.7 |

(அ) தற்காலிகம்

மூலங்கள்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு.
இலங்கை மத்திய வங்கி.

டாளர்களிற்கு குத்தகைக்கு விடப்பட்டதுடன் பியகமவை இரண்டாவது முதலீட்டு ஊக்குவிப்பு வலயமாக அபிவிருத்தி செய்தல் சம்பந்தப்பட்ட தீர்மானம் 1982 இல் எடுக்கப்படவிருக்கின்றது.

தொழிலினதும் கைத்தொழில் வகைகளினுல் பாகுபடுத்தப்பட்ட மொத்த வருவாய்களினதும் மீதான ஒப்பீட்டுத்தரவுகள் அட்டவணே 1·19 இல் கொடுக்கப் பட்டுள்ளன.

## பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

### வலு

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளின் தொடக்கத்திலிருந்து பெற்ருேலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட எண்ணெய் விலே அதிகரிப்புக்களின் விளேவாக ஏற்பட்ட, வலு நெருக்கடியால் மோசமான முறையில் தாக்குண்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இலங்கையும் ஒன்ருகும். நாட்டின் வலுப் பிரச்சினேகளில் ஏற்பட்ட மற்றுமொரு தோற்றப்பாடு யாதெனின் எண்பதின் தொடக்கத்தில் மின்வலுவின் கேள்வி அதன் நிரம்பல்களிலும் விஞ்சிக்காணப்பட்டதேயாகும். அதேவேளேயில் நீர்மின்வலு உற்பத்தி வரட்சி நிலேமைகளால் கட்டுப்படுத்தப்பட்டமையால், நாடு அதிகரித்த செலவினத்தைக்கொண்ட வெப்ப மின்வலு உற்பத்தியைப் பெருமளவில் நாட வேண்டி ஏற்பட்டது. வலுதொடர்பாக கடந்த பத்தாண்டுகளில் கற்றபாடம் யாதெனில் வலு மூலங்களான பெற்ருேலியமும் மின்வலுவும் எதிர்காலத்தில் மலிவாகவும், பெருமளவிலும் கிடைக்கப்பெறமுடியாதிருக்கும் என்பதனே உணர்ந்து கொள்வது அவசியமாகும். என்பதை எனினும் மோசமானநிலேயை அடைந்துவரும் வலுப் பிரச்சினேகளே சிக்கனமாக ஒழுங்கு செய்யப்பட்ட ரீதியில் எதிர்நோக்குகையில் குறுங்காலத்தில் திறமையான கேள்வி முகாமைக்கொள்கையுடன் இணேந்த நீண்ட காலத்தில் வலுவுக்கான மாற்று மூலங்களுக்கான ஆய்வை உள்ளடக்கிய திட்டமிடப்பட்ட நிரம்பல் விரைவு வழிமுறைகளும் அவசியம் என உணரப்பட்டது. வலு முன்னணியில் 1981 இல் எய்தப்பெற்ற அபிவிருத்திகள் அத்தகையதொரு அணுகுமுறையை பெருமளவில் அமையப்பெற்றிருப்பதை உறுதிப்படுத்துவதாக இருந்தன.

1981 இல் எண்ணெய் இறக்குமதிச் செலவு ரூபா நியதிகளில் 7 சதவீதத்தால் அதிகரித்து நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் 42 சதவீதத்திற்கு வகைகூறி நிற்கின்றமை பெற்ருேலிய இறக்குமதிகளில் நாடு தங்கியிருக்கும் உயர்ந்த தன்மையையும் சென்மதி நிலுவையில் அதன் தாக்கங்களேயும் நன்கு தெளிவு படுத்துகின்றது. ஐ. அ. டொலர் நியதிகளில் பெற்ருேலிய உற்பத்திகளின் இறக்குமதி 8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டமைக்கு 1981 இல் இறக்குமதியின் அளவு குறைவடைந்தமையும் சார்புரீதியாக பன்ஞட்டு சந்தையில் எண்ணெயின் விலே பெருமளவில் நிலேயாக இருந்தமையுமே முக்கிய காரணிகளாகும் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் ரூபா நியதிகளில் எண்ணெய் இறக்குமதிக் கொடுப்பனவுகள் வளர்சியுற்றுக் காணப்பட்டமைக்கு ரூபாவில் ஏற்பட்ட பெறுமானத் தேய்வே பெருமளவிற்குக் காரணமாகத் தென்பட்டது. எடுத்துக்காட்டாக 1981 இல் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் சராசரி விலே ஐ.அ. டொலர் நியதிகளில் 11 சதவீதத்தால் அதிகரித்திருந்த வேளேயில்ரூபா நியதிகளில் 29சதவீதத்தால் அதிகரித்துக்காணப்பட்டது. முன்னேய ஆண்டின் 24 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் நாட்டின் மொத்த இறக்குமதியில் எண்ணெய் இறக்குமதிகளின் பெறுமதி 25 சதவீதத்தினேப் பிரதிபலித்தது. அதே